**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**41வது பொதுப்பட்டமளிப்பு வைபவம் - 2026**
**பேராசிரியர் கந்தையா குணரத்தினம் தங்கப்பதக்கம்**

பேராசிரியர் கந்தையா குணரத்தினம் தங்கப்பதக்கத்தினை வழங்கும் பொருட்டு கல்வியாண்டுகள் 2022/2023 மற்றும் 2023/2024 இல் பட்டம் பெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய, பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞான பீடங்களையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைய வவுனியா வளாகத்தின் பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் தொழில்நுட்பக் கற்கைகள் பீடங்களையும் சேர்ந்த தூய, பிரயோக விஞ்ஞானப்பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- **தகைமை:-**
  எதிர்வரும் 41வது பொதுப் பட்டமளிப்பு வைபவத்தில் பட்டம் பெறவிருக்கும் விஞ்ஞானம், விவசாயம், பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் பிரயோக விஞ்ஞானத்தில் நான்கு வருட சிறப்புப்பட்டம் அளிக்கப்படவிருக்கும், முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு மேற்பிரிவில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவர்கள்.

- **விண்ணப்பப்படிவங்களை கீழ்க்காணும் ஒரு முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.**
  1. சிரேஸ்ட உதவிப்பதிவாளர், கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
  2. பிரதிப் பதிவாளர், பரீட்சைகள் மற்றும் மாணவர் சேவைகள் கிளை, வவுனியாப் பல்கலைக்கழகம், வவுனியா.
  3. பல்கலைக்கழக இணையத்தளம்: **www.jfn.ac.lk**

- **விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்தல்**
  பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும், ஏனைய சான்றிதழ்களுடன் **"சிரேஸ்ட உதவிப் பதிவாளர், கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்"** என்னும் முகவரிக்கு 23.09.2026 திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பக் கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் **"பேராசிரியர் கந்தையா குணரத்தினம் தங்கப்பதக்கத்திற்கான விண்ணப்பப்படிவம்"** எனக் குறிப்பிடவும்.

- **முடிவுத்திகதி: 23.09.2026 (புதன்கிழமை)**
- **முக்கிய குறிப்பு:**
  - ஏற்கனவே 2026ம் ஆண்டு மாசி மாதம் 19ம் ,20ம், 21ம் மற்றும் 22ம் திகதிகளில் நடைபெற்ற 40ஆவது பட்டமளிப்பு விழாவின் போது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவை இல்லை.

  - சரியான, பொருத்தமான தகவல்களை உள்ளடக்காதவையும், தெளிவற்றவையும், பூரணப்படுத்தப்படாதவையும் மற்றும் முடிவுத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறுபவையுமான விண்ணப்பங்கள் யாவும் கருத்திற் கொள்ளப்படமாட்டா.

பதிவாளர்